

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.1.2025) தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான ஜப்பான் நாட்டுத் தூதர் ஓனோ கெய்ச்சி அவர்கள் (Mr. Ono Keiichi) சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டுத் துணைத் தூதர் டாகாஹாஷி முனியோ (Mr. Takahashi Muneo), புதுதில்லியிலுள்ள ஜப்பான் தூதரகத்தின் செயலாளர் திருமதி. சுபாகிமோடோ மயுமி (Ms. Tsubakimoto Mayumi), தூதரகத்தின் துணைத் தூதர் திருமதி. யுசாவா நவோகோ (Ms. Yuzawa Naoko) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.1.2025) தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான ஜப்பான் நாட்டுத் தூதர் ஒனோ கெய்ச்சி அவர்கள் (Mr. Ono Keiichi) சந்தித்துப் பேசினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.1.2025) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினத்தில் 8 கோடியே 58 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 7 கோடியே 47 இலட்சத்து 21 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள 25 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், திருமதி.பெ.அமுதா, இயக்குநர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) க.வீ.முரளீதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### 1.250 கோயில் திருப்பணிகளை மேற்கொள்ள உயர்த்தப்பட்ட

# நிதியுதவி தலா ரூ.2.50 லட்சம் வீதம் ரூ.62.50 கோடிக்கான வரைவோலைகள்!

## நிர்வாகிகளிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜன. 30 -**

**1,250 கிராமப்புறத் திருக்கோயில் கள் மற்றும் 1,250 ஆதிதிராவிடர் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக் கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்ள உயர்த்தப்பட்ட நிதியுதவி தலா ரூ.2.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.62.50 கோடிக்கான வரைவோலைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.01.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில், 2024 - 2025 ஆம் நிதியாண்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 1,250 கிராமப்புறத் திருக்கோயில்கள் மற்றும் 1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்ள உயர்த்தப்பட்ட நிதியுதவி தலா 2.50 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 62.50 கோடி ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 12 திருக்கோயில்களின் நிர்வாகிகள் மற்றும் பூசாரிகளிடம் திருப்பணிக்கான வரைவோலைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத் துறையானது தனது கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு, குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. மேலும், சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

2021 - 2022 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற மானியக் கோரிக்கையில், "கிராமப்புறத் திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி தலா ஒரு லட்சத்தை 2 லட்சம் ரூபாயாக உயர்த்தியும், அதன் எண்ணிக்கையை தலா 1,000 லிருந்து 1,250 ஆக உயர்த்தியும் வழங்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, 2021-2022, 2022-2023 மற்றும் 2023 - 2024 ஆகிய நிதியாண்டுகளில் 3,750 கிராமப்புறத் திருக்கோயில்கள் மற்றும் 3,750 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்கு தலா 2 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 150 கோடி ரூபாய்க்கான வரைவோலைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஏற்கனவே வழங்கப்பட்டன.

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 27.02.2024 அன்று நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் கூட்டத்தில், "கிராமப்புறத் திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களில் திருப் பணிகள் மேற்கொள்ள வழங்கப்பட்டு வரும் தலா 2 இலட்சம் ரூபாய் நிதியுதவியினை ரூ.2.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்" என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனடிப்படையில் 2024 2025 ஆம் நிதியாண்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 1,250 கிராமப்புறத் திருக்கோயில்கள் மற்றும் 1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள உயர்த்தப்பட்ட நிதியுதவி தலா 2.50 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 62.50 கோடி ரூபாய்க்கான வரைவோலைகளை முதலமைச்சர் அவர்கள் நேற்று திருக்கோயில்களின் நிர்வாகிகள் மற்றும் பூசாரிகளிடம் வழங்கினார். இதன்மூலம் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்கள் மட்டுமின்றி, கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களிலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பொலிவு பெற்றிடும்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், சுற்றுலா. பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை எழும்பூரில்

# ரூ.227 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 'ஒருங்கிணைந்த வளாகம்'!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஜன 30 - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.1.2025) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை சார்பில் சென்னை எழும்பூரில் உள்ள

கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் 227 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த வளாகத்திற்கு (Unity Mall) அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு அரசின் 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "சென்னையில் 4 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கான கண்காட்சி அரங்குகளை உள்ளடக்கிய ஓர் ஒருங்கிணைந்த வளாகம் ரூ.227 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

**4.54 இலட்சம் சதுர அடி பரப்பளவு**

அதன்படி, சென்னை எழும்பூரில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் 4.54 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் 8 தளங்களுடன் முழுவதும் குளிர்சாதன வசதியுடன் 227 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த வளாகத்திற்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இக்கட்டடத்தின் அடித்தளம் 1 மற்றும் 2இல் 323 கார்கள் நிறுத்தும் வசதியும். கோ-ஆப்டெக்ஸ் காட்சியறையும், தரை தளம் முதல் இரண்டாம் தளம் வரை தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 41 கடைகளும், மூன்றாம் தளம் முதல் ஐந்தாம் தளம் வரை 36 இதர மாநில கடைகளும் (One District One Product Shops), ஆறு மற்றும் ஏழாம் தளங்களில் புத்தாக்க மையம் மற்றும் வடிவமைப்பு அச்சுக்கூடமும், எட்டாம் தளத்தில்

கோ-ஆப்டெக்ஸ் அலுவலகமும் அமைக்கப்படவுள்ளது. மேலும், இவ்வளாகத்தில் உணவுக்கூடம், நான்கு மின் தூக்கிகள் மற்றும் இரண்டு தானியங்கி படிக்கட்டுகள், கழிப்பறைகள், தீயணைப்பு வசதிகள் போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

இந்த ஒருங்கிணைந்த வளாகமானது, ஒரு மாவட்டம் ஒரு பொருள் முன்முயற்சி யின் கீழ், பொருளாதார வலுவூட்டல் மற்றும் கலாச்சார கொண்டாட்டத்தின் முன்னுதாரணமாக அமையும். இது கைவினைஞர்கள் மற்றும் நுகர்வோ ருக்கு இடையிலான புரிதலை வலுப்படுத்துவதையும், மாநிலத்தின் ஒவ்வொரு மூலையிலி ருந்தும் உள்நாட்டு தயாரிப்புகளைக் காட்சிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண் டுள்ளது. ஒருங்கிணைந்த வளாகம் உள்ளூர் கைவினைத்திறனை மேம்படுத்துவதற்கும் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கும் இந்தியாவின் பலதரப்பட்ட கலாச்சாரங்களின் சான்றாகவும் விளங்கும். இந்த வளாகமானது புவியியல் எல்லைகளைக் கடந்து, உள்ளூர் தயாரிப்புகளுக்கு விரிந்த சந்தையினை வழங்குவதோடு, உள்ளூர் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு முக்கிய இடமாக அமையும்.

இந்த நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை செயலாளர் திருமதி.வே.அமுதவல்லி, கோ-ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் தீபக் ஜேக்கப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### யு.ஜி.சி. புதிய வரைவு நெறிமுறைகள் மாநில உரிமைகளைப் பறிப்பதுடன்

# வரம்பு மீறிய சர்வாதிகாரப் போக்கில் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை அழிக்கிறது!

## யு.ஜி.சி.க்கு எதிராக மக்கள் மின்னஞ்சல் அனுப்ப உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் கோரிக்கை!

**சென்னை,ஜன. 30 -**

**பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் (UGC) புதிய வரைவு நெறிமுறைகள் மாநில உரிமைகளைப் பறிக்கின்றது! வரம்புமீறிய சர்வாதிகாரப் போக்குடன் தமிழ்நாட்டுக் கல்வி வளர்ச்சியை அழிக்கின்றது! என்றும் தமிழ்நாட்டு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து UGC-க்கு மின்னஞ்சல் அனுப்ப வேண்டும்! எனவும், உயர்கல்வி துறை அமைச்சர் கோவி. செழியன் அவர்கள் செய்தியாளர் சந்திப்பில் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அமைச்சர் கோவி.செழியன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

ஒன்றிய அரசின் கைப்பாவையாக இருந்து செயல்படக் கூடிய பலகலைக்கழக நிதி நல்கைக் குழு, புதிய வரைவு நெறிமுறைகள் 2025 வெளியிட்டுள்ளது. இந்த புதிய வரைவு நெறிமுறைகள் மாநில உரிமைகளை பறிக்கின்றது; மாநிலங்களின் கல்வி அமைப்பு முறையை சீர்குலைக்கின்றது. ஆகவே, ஒன்றிய அரசு இதனைக் கைவிட வேண்டும். யூஜிசி புதிய வரைவு நெறிமுறைகளைத் திரும்ப பெற வேண்டி, பல்வேறு போராட்டங்கள் பல மாநிலங்களில் நடைபெற்று வருகின்றன.

அடிப்படைக் கல்வியிலிருந்து உயர் கல்வி வரை ஒன்றிய அரசாங்கம் செய்துவரக்கூடிய இடர்பாடுகளை கல்வியாளர்கள், மாணவர்கள், பெற்றோர் உள்ளிட்ட அனைவரும் அறிந்து



கொள்ள வேண்டியது அவசியம். ஒன்றிய அரசின் சதித் திட்டத்தை புரிந்து கொள்ள வேண்டும். . யூஜிசி புதிய வரைவு நெறிமுறைகளைத் திரும்ப பெற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி, நாடு முழுவதும் கருத்துகளை எடுத்து செல்ல வேண்டும். இதனை விளக்குவதற்காகவே பத்திரிகையாளர்களைச் சந்தித்துள்ளேன்.

**பல்கலைக்கழகங்களை கைப்பற்ற ஒன்றிய அரசு முயற்சி!**

நாட்டு மக்களின் பண்பாட்டு கூறாக அமையும் பள்ளிக் கல்வி - உயர் கல்வி ஆகியவற்றை அந்தந்த மாநில தேவைகளுக்கு தகுந்தாற் போல் அமைத்துக் கொள்ள, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கு முழு உரிமை உண்டு.

இந்த மாநில உரிமையைப் பறிக்கும் விதமாக 6 - 1 - 2025 அன்று வெளியிட்டுள்ள யுஜிசி புதிய வரைவு நெறிமுறைகள் அமைந்துள்ளன. மாநில அரசு உருவாக்கிய பல்கலைக்கழகங்கள், மாணவர்களின் உயர்கல்வியை ஒழுங்குபடுத்தச் செயல்பட்டு வருகிறது. இந்தப் பல்கலைக்கழகங்களை யூஜிசி மூலம் கைப்பற்றும் முயற்சியை ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக, "நான் சொன்னதை நீங்கள் செய்ய வேண்டும்" என்ற சர்வாதிகார போக்கைப் பல்கலைக்கழகங்கள் மீதும் திணிக்கும் வகையில் யூஜிசி வரைவு நெறிமுறைகள் உள்ளன.

துணைவேந்தர் நியமனத்தில் இது வரை உள்ள நடைமுறை பின் பற்றாமல், நாங்கள் நினைத்தை செய்ய வேண்டும் என்ற அதிகார போக்குடன் துணைவேந்தர் தேர்விலும் தலையிட்டு, முழு அதிகாரத்தையும் ஆளுநருக்கு மாற்றுகிறது.

**யு.ஜி.சி.யின் செயல்பாடு மாநில அரசுக்கு சவாலாக உள்ளது!**

கல்வி அரசியலமைப்பின் ஒத்திசைவு பட்டியலில் உள்ளது. ஆனால் மாநில அரசை கலந்து ஆலோசிக்காமலேயே, யூஜிசி புதிய நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது வரம்பு மீறிய செயல் ஆகும். இந்த யூஜிசி யின் செயல்பாடு மாநில உரிமைக்கு விடுக்கப்பட்ட சவாலாகப் பார்க்கிறோம்.

ஒத்திசைவு பட்டியல் என்றால் மாநில அரசின் கருத்து கேட்டு இருக்க வேண்டும். இதில் யூஜிசி அதிகார வரம்பை மீறி இருக்கிறது. எனவே யூஜிசி தொடர்செயல்பாடுகளை பார்க்கும் போது, ஒன்றிய அரசின் கைப்பாவையாக யூஜிசி செயல்படுவது தெளிவாகத் தெரிகிறது.

கல்வியாளர்கள் அல்லாத, கல்வி பணி சாராத சார்ந்த ஒருவர்கூட துணைவேந்தராக நியமிக்கலாம் என வரைவு நெறிமுறைகளில் கூறியிருப்பது, கல்வியாளர்களுக்குப் போடப்பட்ட முட்டுக்கட்டை.

கல்வி என்பது மற்ற நிறுவனங்களை நடத்துவது போன்றது அல்ல. மாணவர்களிடம் கல்வி ஆர்வத்தை ஊட்டுதல், பாடத்திட்டங்களை வகுப்பது முதலானவற்றை மேற்கொள்வதற்கு, தொடர்ந்து கல்வி பணி ஆற்றுபவர்களே துணைவேந்தராகப் பணியாற்ற வேண்டும். கல்வி பணி சாராதவர்களும் துணைவேந்தர் ஆகலாம் என்பது உயர்கல்விக்கு விளைவிக்கும் இடையூறு.

**மாணவர்களின் இடைநிற்றலுக்கு வழிவகுக்கும்!**

பட்டப்படிப்பு மூன்றாண்டு, முதுகலை படிப்பு இரண்டாண்டு என்ற நிலையை மாற்றி, எந்தவொரு ஆண்டிலும் சேரலாம், வெளியேறலாம் என திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. கல்வி பயில்வதில் இடைநிற்றலுக்கு இது வழிவகுக்கும்.

தொழில் கல்வியில் இருந்து பொது கல்விக்கும், பொது கல்வியில் இருந்து தொழில் கல்விக்கும் மாறுவதற்கு வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. இது மாணவர்களின் கல்வித் திறனை அழிக்கும் முயற்சி.

இரண்டு பாடத் திட்டங்களும் வெவ்வேறாக இருக்கும் நிலையில், இரண்டையும் மாறி மாறி படிப்பது எதிலொன்றிலும் உரிய தகுதி பெற முடியாத நிலையை உருவாக்குகின்றது.

ஓரே நேரத்தில் இரண்டு இளங்கலை, முதுகலை படிக்கலாம் என்பது, கல்வியை முறையாக கற்கும் வழிமுறைகளை சீர்குலைக்கிறது.

**தமிழ்நாட்டில் உயர்கல்வியை சீர்குலைக்கும் செயல்!**

இந்தியாவில் உயர்கல்வியில் தமிழ்நாடு முதலிடம். 2030ல், 50 சதவீதத்தை அடைய வேண்டும் என்பது ஒன்றிய அரசு இலக்கு. ஆனால் தற்போதே 48 சதவீத இலக்கை எட்டிவிட்டது தமிழ்நாடு. ஆகவே உயர்கல்வியை சீர்குலைக்கும் முயற்சியா கவே இந்தப் புதிய வரைவு நெறிமுறைகளைப் பார்க்கிறோம்.

வரைவு நெறிமுறை திருத்தங்களை ஏற்காவிட்டால், பல்கலைக்கழகங்கள் வழங்கிய பட்டங்கள் செல்லாது, யூஜிசி கூட்டங்களுக்கு அழைக்க மாட்டோம், யாரும் பங்கேற்க இயலாது, பல்கலைக்கழக சட்ட அங்கீகாரமும் செல்லாது என மிரட்டல் விடுத்து இருக்கின்றனர்.

இந்த சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 9 -1 - 2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் இது தொடர்பாக, வரைவு நெறிமுறைகளை உடனடியாகத் திரும்பபெற வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய கல்வித் துறை அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதுபோலவே மற்ற மாநிலங்களும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று கேரள சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. தெலுங்கானா முதல்வர் அவர்கள் புதிய நெறிமுறைகளுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

**ஒன்றிய அரசின் நெறிமுறைகளை தமிழ்நாடு அரசு ஏற்காது!**

ஒன்றிய அரசு கொண்டுவதுள்ள இந்த வரைவு நெறிமுறைகளைத் தமிழ்நாடு அரசு ஒருபோதும் ஏற்காது. திரும்ப பெறும் வரை போராடும். அதற்கான பணிகளைத் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகின்றார்.

பல்கலைக்கழகம் உருவாக்கம், இடம், கட்டடம் கட்டுவது, ஊதியம் வழங்குவது என அனைத்தையும் செய்வது மாநில அரசு. ஆனால் துணைவேந்தர் நியமனத்தில் மட்டும் மாநில அரசிற்கு அதிகாரம் இல்லை என்று பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு கூறியிருப்பது எவ்வளவு மோசமான சர்வாதிகாரப் போக்கு என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

எதிர்வரும் 5 - 2- 2025க்குள் இந்த விவகாரத்தில் கருத்துகளை சொல்ல வேண்டும் என கேட்டு இருக்கிறார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாநில முழுவதும் கல்வியாளர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகிய அனைவரும் பிப்ரவரி 5ம் தேதிக்குள் புதிய நெறிமுறைகளைத் திரும்ப பெற வேண்டும் என draft-regulations@ugc.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்குக் கருத்துகளை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் கோவி. செழியன் குறிப்பிட்டார்.